ஐ. தே. கட்சியில் தமிழருக்கு நம்பிக்கையில்லை
தேர்தல் நடப்பின் ஆட்சியை கைப்பற்றுவேன்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

நமது முரசு

முரசு 2 13 - 1 - 86 திங்கள் (மார்கழி 29 ஜ. அவ். 2) முழக்கம் 339

ஸ்ரீமாவோ அளித்த பேட்டி

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் எள்ளளவும் நம்பிக்கையில்லை. ஜனாதி தி தேர்தலிலும், சர்வஜன வாக்கெடுப்பிலும் இவர்கள் தமது மனப்போக்கை அரசாங்கத்துக்குப் புரியச் செய்துள்ளனர். தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமானால் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பொதுத் தேர்தல் நடத்துவதன் மூலம் தமிழ் மக்கள் தாம் விரும்பும் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தெடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதுமட்டுமன்றி, தென்னிலங்கை மக்களும் தாம் விரும்பும் கட்சியைத் தெரியச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். 'தமிழர் விடுதலைக் கூட்டணி மீது தமிழ் மக்கள் இப்போது நம்பிக்கையில்லை பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகள் இப்போது கிடையாது. எனவே தமிழ்மக்கள் புதிய பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினால் மட்டுமே —6ஆம் பக்கம் பார்க்க

★ கண்காணிப்புக்குழு உறுப்பினர் இருவரின் ராஜினாமாவை அடுத்து

யுத்த நிறுத்தத்தை வாபஸ்பெற
போராளிகள் குழுக்கள் முடிவு!

அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி சென்னை கூட்டத்தில் முடிவெடுக்கப்படும்

(புதுடில்லி)

கடந்த ஏழுமாதகாலமாக அமுலில இருந்து வந்த யுத்த நிறுத்த ஒப்பந்ததை வாபஸ்பெறுவதற்கு நான்கு போராளிகள அமைப்பை உள்ளடகிய ஈழம் தேசிய விடுதலை முன்னணி ஆலோசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி சென்னையில் கூடி முடிவெடுக்கப் படுமென பி. ரி ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது:

கடந்தவருடம் ஜூன் மாதம் 18 ம் தகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பதினெட்டு வார கால யுத்த நிறுத்த ஒப்பந்தம், செப்டம்பர் 17 ம திகதி மீண்டும் இலங்கை அரசாங்கத்தலைல் தன்னிசையாக நீடிக்கப்பட்டது.

எனினும், இக்காலத்தல் அப்பாவித்தமிழாகள் படுகொலை செய்யப்படுவதாகவும், ஒப்பந்தத்தை அரசாங்க பாதுகாப்புப் படைகள் மீறிவருவதா வும் ஈழம தேசிய விடுதலை முன்னணி பலதடவை பகிரங்கமாக அறிவித்து வந்தது.

மேற்படி முன்னணி சமர்ப்பித்த பட்டியல் மூலம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ...6ம் பக்கம் பார்க்க

பருத்தித்துறையில் குண்டு வெடிப்பு; துப்பாக்கி வேட்டு

அடுத்தடுதது இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களை அடுத்து நேற்றுக் காலை பருத்தித்துறை நகரமே ஸ்தம்பிதமடைந்தது.

கடைகள் எல்லாம் அழுதது மூடப்பட்டன. சந்தைகளை கலைந்தன, மக்கள் அவசர அவசரமாக பருதத்தித்துறை நகர் பகுதியைவிட்டு வெளியேறினர்.

நேற்றுக் காலை சீருடையினர் முகாமைவிட்டு வெளியே வர முயற்சிசெய்ததாகவும அதனை அடுத்து வெளியில் குண்டுகள் வெடிக்கப் வைக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. குண்டுவெடிப்புக்களையடுத்து சீருடையினர் முகாமுக்கு மீண்டும் திரும்பிச் சென்றனராம்.

...6ம பக்கம பார்க்க

வடபகுதி ரயில் சேவைகள் நேற்று முதல் நேரமாற்றம்

வடபகுதிகான ரயில் சேவைகளில நேற்று முதல் நேர மாறறம் கொண்டுவரப் படடுளளது.

இதன்படி இன்டர்சிற்றி ரயில மகாட்டையிலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்படடு பகல 12-35 மணிகேயாழ்ப்பாணம் வரும். இங்கிருந்து பிறபகல் 1-15 க்குப் புறபபடடு இரவு 8-30 க்குக் கோட்டை சென்றடையும.

யாழ்தேவி காலை 5-50 க்கு மருதானையிலிருந்து புறப்படடு பகல் 1-05 க்கு யாழ். வரும். இங்கிருந்து 1-50 கபுப் புறப்பட்டு இரவு 9-50 க்கு மருதானை சென்றடையும்.

—6-ம் பக்கம் பார்க்க

முகாம் பாதை திறக்கப்படவில்லை

நாவற்குழி முகாம ஊடான பாதை தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலலையே உள்ளது. இதனால வாகனங்கள் தறபொழுது கைதடி — மகாப்பாய் பாதையையே போக்குவத்திறகுப் பயன்படுத்தி வருகின்றன.

உயர்மட்டப் பேச்சையடுத்து

நீலன் சென்னைக்கு அவசர விஜயம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் அவசர விஜயமொன்றை மேற்கொண்டு சென்னை சென்றுள்ளார். கொழும்பில் இரு தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற உயர் மட்டச் சந்திப்புப் பேச்சுவார்த்தையொன்றைத் தொடர்ந்து இவர் சென்னைக்கு அழைக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. சென்னை புறப்படுவதற்கு முன்னர் கலாநிதி நீலன் திருச்செல்வம் கொழும்பிலுள்ள பாரதத் தூதுவர் திரு. கே. என். டிக்ஸிற்றைத் தனிமையில் சந்தித்துப் பேசியதாகவும் தெரியவந்துள்ளது. நீலன் சென்னையிலிருந்து டில்லிக்கும் செல்லக் கூடும்.

அப்பாவித் தமிழர் படுகொலை தீவிரமாகும் என எச்சரிக்கை

(சென்னை)

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிலிருந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் ராஜினாமாச் செய்து விட்டதால் இலங்கையில் அப்பாவித் தமிழாகள் மீதான படுகொலைகள் மேலும தீவிரமாகலாம எனஈழதமிழாகளைப் படுகொலையிலிருந்து காப்பதற்கான இயக்கம் அச்சம் தெரிவிததுள்ளது.

இது தொடர்பாக மேற்படி இயகம் சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில், இப்பொழுது அரசினால் நியமிக்கப்பட்டவர்கள் அதிலும் கூடுதலாக சிங்களவர்களே இக்குழுவில் அங்கத்தவர் —6-ஆம் பக்கம் பார்க்க

இ. தொ. கா. பிரார்த்தனை இன்று முடிவு தெரியும்

நாளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருகும் பிரார்த்தனை இயகம் பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று இறுதி முடிவெடுக்கும்.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் பறறி நேற்று காங்கிரஸ் திட்டக கமிட்டி கூடி ஆராய்ந்து அதற்கான ...6 ம பக்கம் பார்க்க

கண்காணிப்புக் குழுவுக்கு

புதிய உறுப்பினர் நியமனம் இன்னமும் முடிவாகவில்லை!

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணியால் பிரேரிக்கப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பியும், திரு. சிவபாலனும் ராஜினாமாச் செய்துள்ளதால் அவர்களது இடத்திறகுப் புதிதாக இருவர் நியமிக்கப்படுவது பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாதென மேற்படி குழுவின் செயலாளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்ஹ தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவிற்கு —6 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது நமுமுரசு

வரி விளம்பரம்

பெண்கள் தேவை

தையல் கலையில் தனி இடம் பெற்றிருக்கும் மியாமி ஸ்தாபனத்தாருக்கு, தையலின் அனுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. மியாமி காமென்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். R/16315

விற்பனைக்கு

பரந்தன் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். S. M. நடராசா, குமரபுரம் சந்தி, பரந்தன். R/16317

மகவம்

பொங்கல் விழா

குரும்பசிட்டி மதிகலைஞர் வட்டம் (மகவம்) மதி அக்கடமி கல்வி நிலைய அனுசரணையுடன் நடாத்தும் பொங்கல் விழா திரு. வேல் அமுதன் தலைமையில் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு குரும்பசிட்டி மதி அக்கடமியில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினர்களாக தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. இராசரத்தினம், மகாஜனக் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை திருமதி செள. இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை ஆசியுரை வழங்கி விழாவை ஆரம்பிப்பார். திரு. ரி. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்துவார். மற்றும் புலவர் மா. பார்வதிநாதசிவம், திரு. க. சிதம்பரநாதன், கவிஞர் பி. நடராஜன், மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. க. நாகராஜா, வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் என். கணேசபிள்ளை, வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராஜா குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலய அதிபர் திரு. சி. கணகசுந்தரம், திருமதி கோகிலா மகேந்திரன் முதலானோர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பவள விழா தொடர்பான அரங்கமும் இங்கு இடம்பெறுகின்றது.

உங்களுடையதா?

சுல்தான் மொஹிதீன் சாலிம் என்பவரது வாகன லைசன்சும், இன்சூரன்ஸ் பத்திரங்களும் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர் அடையாளம் காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாவற்குளம் பகுதி

முஸ்லிம் குடும்பங்களுக்கும் நிவாரண உதவி கிடைக்கும்

(வவுனியா)

பாவற்குளம் பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறி மீண்டும் தமது சொந்த இடங்களில் வந்து குடியேறும் தமிழ், சிங்கள குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரண உதவிகளை இடம் பெயராமல் தமது சொந்த இடங்களிலேயே தொடர்ந்தும் குடியிருந்து வந்த முஸ்லிம் குடும்பங்களுக்கும் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி உத்தரவை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அட்மிரல் பெரேரா வழங்கியுள்ளார். இதனால் பாவற்குளத்தைச் சேர்ந்த 150 முஸ்லிம் குடும்பங்கள் பயனடைய உள்ளன.

அசம்பாவிதங்கள், அச்சுறுத்தல்கள் பீதிகாரணமாக பாவற்குளத்தில் இருந்து தமிழ், சிங்கள குடும்பங்கள் வெளியேறிய போதிலும் முஸ்லிம் குடும்பங்கள் தொடர்ந்தும் பல கஷ்டங்கள், சிரமங்களுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களிலேயே குடியிருந்து வந்தனர். போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலும், விவசாயத்தை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலையிலும் இவர்கள் காலத்தைப் போக்கி வந்தார்கள். வவுனியா அரசாங்க அதிபர் திரு கே. சி. லோகேஸ்வரன் இவர்களது கஷ்ட நிலைமைகளைச் சுட்டிச் காட்டியதன் பலனாக இவர்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இணங்கியுள்ளார்:

இதன்படி விசேட சலுகை யாக பாவற்குளம் மக்களுக்கு 2 மாதங்களுக்குரிய பங்கீட்டு உணவுப் பொருட்களும், இவர்கள் தமது விவசாயத்தை மேற்கொள்வதற்குத் தேவையான விதைநெல் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக 1500/-ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்படவுள்ளன.

3750 ஏக்கர் நெற்காணிப் பரப்பைக் கொண்டுள்ள பாவற்குளத்திற்கு போதிய அளவு நீர் வந்துள்ள போதிலும் இது வரையும் விவசாய முயற்சிகள் முழுமையாக மேற்கொள்ளப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாவற்குளம் மக்களது புனர் வாழ்வு, விவசாய முயற்சிகள் தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

நல்லூரில் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் நல்லூர் பண்டாரிக்குளம் மருத வளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் பொங்கல் விழாக் கொண்டாடவுள்ளனர்.

திருவெம்பாவை வீதிப் பஜனையில் பங்குபற்றியவர்களுக்குப் பரிசில் வழங்கல், மன்றமாணவ, மாணவியரின் பண்ணிசை, இன்னிசை அரங்கு முதலான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பிறந்தநாள் வாழ்த்து



* திருநெல்வேலி கிழக்கு யோகரெட்ணம் கனகாம்பிகை தம்பதியின் மகள் துளசி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* திருநெல்வேலி வாமதேவன் சிவபாக்கியம் தம்பதியின் மகன் சபேசன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* நல்லூர் நடராசா ராதாமணி தம்பதியின் மகள் சங்கீதா இன்றுதனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* கரவெட்டி கிழக்கு சின்னராஜா செல்வராணி தம்பதியின் மகள் விஜித்கோபிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* கொழும்புத்துறை கோபாலகிருஷ்ணன் பத்மாவதி தம்பதியின் மகள் சுதர்ஜினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* நாவற்குழி தங்கராஜா சுசீலா தம்பதியின் மகள் மைதிலி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

* சங்கத்தானை விஜேந்திரன் புஸ்பமாலா தம்பதியின் மகள் சைலஷா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

* காரைநகர் விக்னேஸ்வரன் புஷ்பலீலா தம்பதியின் மகள் அருட்செல்வி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்,

* யாழ்ப்பாண சுல்தான்ம் காமிலா தம்பதியின் மகன் றிஸ்வான் இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

* பருத்தித்துறை வியாபாரி மூலை சிவப்பிரகாசம் புஸ்பவதி தம்பதியின் மகன் இந்துமதி இன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

* தச்சன்தோப்பு தம்பிராசா பூமணி தம்பதியின் மகன் சுகுணராஜ் இன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

மரண அறிவித்தல்

அ. இம்மனுவேற்பிள்ளை

திரு. அந்தோனிப்பிள்ளை இம்மனுவேற்பிள்ளை (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) காலமாகிவிட்டார். இவர் திரேசம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சூசாஞ்பிள்ளையின் மூத்த புதல்வனும், ஸ்ரான்லி (அவுடாபி), இமெல்டா (பரந்தன்), ஆனசிலி (கனடா), கிங்சிலி (பிரான்ஸ்), லெஸ்லி (அமெரிக்கா), ஜடா (இந்தியா) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சூசைதாசன் (பண்ணைமுகாமையாளர், ஓட்டுசுட்டான்), சுஜீவன், சாளினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

42/1, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

R/16322

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
அமைப்பு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விபரம்	அட்டவணை: கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கப் படக்கூடியது)	அட்டவணை: கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படத் தகாதது)	அட்டவணை: ஒப்பந்தகாரர் பதிவுத்தொகை
1. விக்ரோறியா வீதி பாலம் அமைத்தல்.	2000/-	250/-	500,000/-
2. கொட்டடி தற்காலிக சந்தையிற் கருவாட்டுக்கடை, கோழிக்கடை, மலகூட வசதிகள், அணைச்சுவர் அமைத்தல்.	1000/-	250/-	200,000/-
3. பொதுசன நூல்நிலைய குருநகர்கிளை நூலகம் அமைத்தல்.	2000/-	250/-	500,000/-
4. பாஷையூரில் மீன் சந்தை, மரக்கறிச்சந்தை, அலுவலகம் அமைத்தல்.	1000/-	250/-	200,000/-
5. பெரியகடை மரக்கறிச்சந்தை அமைத்தல்.	2000/-	250/-	400,000/-
6. (ஏ) இராஜசிங்கம் வீதி மதகு பூர்த்தி செய்தல்) (பி) வன்னியசிங்கம் படிப்பக அமைப்பு வேலை) (சி) றக்கா வீதி வடிகால் அமைத்தல்)	1000/-	250/-	200,000/-

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணி வரை மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 09-01-86.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பி/1000

31-ம் நாள் நினைவஞ்சலி

செல்லத்துரை சின்னராசா (சாமி)

பிறப்பு: 22.9.37
இறப்பு: 15.12.85

அன்புடன் எமை ஆதரித்த அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தி அடைக.

அன்பு மனைவி, மக்கள்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

R/15292

பாலர் கல்வியில் கரிசனை மிகவும் இன்றியமையாதது

(சரசாலை)

சங்கத்தானை நாமகள் பாலர் பாடசாலை பதினேழாவது ஆண்டு விழா திரு. இ. சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்) தலைமையில் நடைபெற்றது. மேற்படி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. செ. நல்லையா "பாடசாலைக்கு பிள்ளைகள் செல்லுமுன்பிள்ளை கட்டு பாலர் பாடசாலைகள் நல்ல அறிவினை கொடுக்க உதவுகின்றன. எனவே பாலர் பாடசாலைகள் கிராமந்தோறும் உருவாக்கப்படவேண்டும். இது தொடர்பாக அரசின் கல்வித் திட்டங்கள் வேண்டிய வழி வகைகளை காணத் தவறிவிட்டன. உள்ளூராட்சி மன்றங்கள் இப்பணியினை மேற்கொள்ள விதி முறைகள் இடமளிப்பினும் அவையும் இது தொடர்பாக அக்கறைகாட்டாமை வருந்தற்குரியது. எனவே வட்டாரங்கள் தோறும் மக்களாக முன் வந்து இவ்வித நிலையங்களை உரியமுறையில் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக கல்விமான்கள் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும்" எனக்கேட்டுக்கொண்டார்.

புங்குடுதீவு: பல பகுதிகளில் இன்னமும் மின்வசதி இல்லை

(ஊரைதீவு)

புங்குடுதீவின் நுழைவாயிலான பழைய துறைப் பகுதிக்கு இன்னும் மின்னிணைப்பு வழங்கப்படாதிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் மிகவும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

அத்தோடு புங்குடுதீவின் வடபாகத்திலுள்ள ஊரைதீவு, மடத்துவெளிக் கிராமங்களிலுள்ள பெத்தப்பு கோயில் ஒழுங்கை, மின்னியம் வாய்க்கால் ஒழுங்கை, திக்கிலி ஒழுங்கை, வரைதீவு ஒழுங்கை, கம்பிலியன் ஒழுங்கை ஆகிய இடங்களுக்கும் மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை.

இப்பகுதிகளுக்கூடாக மின்னிணைப்பை வழங்கி புங்குடுதீவு பாணுவிடை சிவன் தேவஸ்தானம்வரை இணைப்பை நீடிக்குமாறு ஊரைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ்ப்பாணப் பகுதி மின்சாரப் பொறியியலாளரைக் கோரியுள்ளனர்.

இதேபோன்ற வேண்டுகோள்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும், வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும் விடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அபிவிருத்திச் சபைத் தலைவர் பேச்சு:

'பிறந்த மண்ணிலேயே பராரியாக தவிப்பு; அகதிகளுக்கு உதவுதல் இரத்தக்கடன்'

(வயாவிளான்)

"தான் பிறந்து, வளர்ந்து, முத்தமிட்டு நேசித்த மண்ணிலேயே அகதியாக, கணவனை, பிள்ளையை, வீட்டை, சொத்தை இழந்து வெறுங் கையுடன் பராரியாக ஏங்கி இடிவிழுந்து நிற்கும் துர்ப்பாக்கிய நிலை இன்று எம்உடன் பிறப்புக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று தமிழீழத்தின் தலைநகரான திருமலையில் ஏற்பட்ட சம்பவம், நாளை யாழ் நகரில் ஏற்படப் போகின்றது. வங்காளத்தில் நாம் கேட்டறிந்த சம்பவம் இன்று எம் கண் முன்னால் நடக்கிறது. பியாவ்ருவில் நாம் படித்தறிந்த சம்பவம் எம் பக்கத்தில் நடக்கின்றது. பலஸ்தீனத்தைப் பற்றிய அகதிகள் முகாமையழித்தெரித்த சம்பவம் எம் அருகில் நடக்கின்றது. பிணங்கள் எம் காலடியில் குவிகின்றன. நாம் பிணமாகும் நாள் நாளையோ, இன்றோ என்ற ஏக்கத்துடன் நடைப் பிணமாக நாம் நடுக்கத்துடன் வாழ்கின்றோம்; நாம் இன்றும் சொத்து, பொருள் என்று இழப்பதற்கு எதையும் தயாரற்ற நிலையில்தான் இருக்கின்றோம்."

இவ்வாறு மேற்கண்டவாறு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக அச்சுவேலி, பத்தமேனி பிரஜைகள் குழு சார்பில் அச்சுவேலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ரீ எம். யோசேப் அவர்களின் தலைமையில் நடைபெற்ற "ஒலியும் ஒளியும்" என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரும், பத்தமேனி பிரஜைகள்குழுத் தலைவருமான திரு. நா. இராஜேந்திரன் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "எம்மை நாடி ஓடிவந்த அகதிகளுக்காக நேசக்கரம் நீட்டுவதுடன் மட்டும் நில்லாது எமது சொத்தில் சிலவற்றைப் பகிர்ந்து கொடுத்து அவர்களது கொடிய துன்பத்திற்கு ஓரளவாவது நிவாரணம்காண முயற்சிப்போம். இம் முயற்சியின் ஆரம்பம் இன்றைய நிதி சேர்க்கும் நிகழ்ச்சியாக அமையட்டும்" என்றார்.

அச்சுவேலிப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) உரையாற்றுகையில், "750 அங்கத்தவர்களைக் கொண்ட 105 குடும்பங்களை அச்சுவேலியில் வைத்து நாம் பராமரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இன்னும் இடம்பெயர்ந்து வந்துகொண்டே இருக்கின்றார்கள். இவர்களை பராமரிக்க எமமிடமுள்ள நிதிவசதி மிகக் குறைவு. அரசும் தமிழ் அகதிகளுக்கான நிவாரணத்தை நிறுத்த உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் எமது பங்களிப்பு தீவிரமடையவேண்டியுள்ளது. அகதிகளாகினோரின் கைகள் சம்பவங்களல்ல; சரித்திரம், இரத்தத்தால் எழுதப்பட்டகண்ணீர்க் காவியங்கள்" என்றார்.

புரதச்சத்து நாளாந்த உணவில் மிகவும் அவசியம்

(உடுவில்)

"எமது நாளாந்த உணவில் புரதச்சத்து அவசியமாகும். இச்சத்து உடல் வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் மிகவும் வேண்டியதொன்று. வளரும் குழந்தைகளுக்கும் புரதம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே நாம் எமது நாளாந்த உணவுகளில் புரதச் சத்துக்கள் டங்கிய பயறு, உளுந்து, எள்ளு போன்றவற்றை அதிகளவில் சேர்த்துக்கொள்ளல் அவசியம். பரந்தளவில் நெற்செய்கையிலீடுபட்டுள்ள சங்குவேலி, சண்டிலிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடத்து விவசாயிகள் இன்னும் சில கிழமைகளில் அறுவடையை ஆரம்பிக்கவுள்ளனர். அறுவடை முடிந்த பின்னர் உள்ள ஈரப்பதனை உபயோகித்து சிறு தானியப் பயிர்களான கௌபி, பயறு, எள்ளு, உளுந்து போன்றவற்றை விதைக்க வேண்டும்."

உடுவில் விவசாயப் போதனாசிரியர் திரு. சீ. கே. கந்தசாமி கொள்வார்களா என அங்காய்க்கின்றார்கள்.

மேற்கண்டவாறு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாலோசனையில் தற்பொழுது வவுனியா, அனுராதபுரம் போன்ற இடங்களில் மேற்கூறப்பட்ட சிறு தானியச் செய்கை குறைவடைந்துள்ளதால் இப்பயிர்ச்செய்கை மூலம் கூடிய இலாபமடைய முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றிற்குரிய விதைகளை கமத்தொழிற் திணைக்களம் வழங்க முடியா திருப்பதாகவும் எனவே விவசாயிகளே விதைகளை சேமித்து வைக்கும்படியும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

எள்ளுக்குரிய விதைகள் அராலிப் பகுதியில் அதிகளவில் இருப்பதாகவும் எனவே விவசாயிகள் அங்கு சென்று எள் விதைகளை கொள்வனவு செய்யலாமெனவும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

மூல்லை. மாவட்டத்தில 14 கிராமிய சுகாதார நிலையம்

(மாங்குளம்)

இவ்வருடத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பதினான்கு கிராமியச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவ்வகையில் முல்லைத் தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டு கிராமிய சுகாதார நிலையங்களும், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு நிலையங்களும் அமையவுள்ளன. இதற்கான கட்டட நிர்மாணிப்பு வேலைகள் அனைத்தையும் அவ்வப் பகுதி கிராமோதய சபை உதவியுடன் மாங்குளம் தேசிய வீடமைப்பு அதிகாரசபை மேற்கொள்ளுமென மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான எட்டு நிலையங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கட்டட வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான ஆறு நிலையங்களின் வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிர்மாண வேலைகள் அனைத்தும் எதிர்வரும் சித்திரை மாத இறுதியில் முடிவடைந்து சுகாதார வைத்திய நிலையங்கள் தமது சேவையை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிர்மாணிப்புக்கு 21 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜெயவர்த்தனபுரவில்

சுதந்திரதினக் கொண்டாட்டம்

அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினக்கொண்டாட்டங்கள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்திலுள்ள புதிய பாராளுமன்ற கட்டத்தின் முன்பாக நடாத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கான ஆயத்தங்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செய்துவருகிறது.

கசட் அபகரிப்பு

வடமராட்சிப் பகுதியில் உள்ள தியேட்டர் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஆபாசப்படம் காண்பிக்கப்பட்ட போது, திடீரென தியேட்டருள் பிரவேசித்த சில இளைஞர்கள் அந்த படக்காட்சியை தடுத்து நிறுத்தினர். பின்னர் அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ கஸட், டெக் ஆகியவற்றையும் தம்முடன் எடுத்துச் சென்றனராம்.

பெப்ரவரி 1-ல் கப்பல் சேவை

கடந்த பதினைந்து மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் நடைபெறவுள்ளது. இந்த கப்பல் சேவை வாரத்தில் மூன்று நாட்களுக்கு இடம்பெறும்.

இதேவேளை தலைமன்னார்-கொழும்பு ரயில் சேவையும் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக புகையிரதப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

மக்கள் அங்கலாய்ப்பு

தூண்கள் நிமிர்ந்தென்ன? மின்சாரம் தான் இல்லையே

(வயாவிளான்)

வயாவிளான்-தெல்லிப்பளைப் பாதையில் நீண்டகாலமாக நிமிர்த்தி விடப்பட்ட மின் தூண்கள் மின்னிணைப்பினைப் பெறுமலே இருக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளினை ஏற்று மூன்னாள் காங்கேசன்துறை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கத்தால் மின் இணைப்புக்காக நிதி ஒதுக்கப்பட்டும், தனியே மின் கம்பங்கள் மட்டும் நிமிர்த்தப்பட்டு மின்வயர்கள் பொருத்தப்படாதிருப்பது பற்றி இப்பகுதி மக்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

"கடவுள் விடை கொடுத்தாலும், பூசாரி விடை கொடாத நிலை" தமக்கு ஏற்பட்டு விட்டதேயென எண்ணும் இப் பகுதி மக்கள், இது சம்பந்தமான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ, அல்லது நலன்விரும்பிகளோ மேற்கொள்வார்களா என ஏங்குகின்றார்கள்.

கொள்ளைக் கோஷ்டி கைது

மாத்தறை மாவட்டத்தில் கடந்த சில காலமாக கொள்ளைகளில் ஈடுபட்டுவந்த கொள்ளைக் கோஷ்டியொன்றை தங்காலை பொலிஸார் கைது செய்தனர்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சிகளில் ஈடுபட்ட தலைவர் ஒருவர் உட்பட பதினெட்டுப் பேர் இதில் கைதாகியுள்ளனர். இவர்களிடம் இருந்து நான்கு லட்சம் ரூபா பெறுமதியான கொள்ளைப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன், பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

மருத்துவ மாது நியமிக்க கோரிக்கை

(சுண்டுக்குளி)

மானிப்பாய்ப் பட்டின சபைப் பகுதிக்கு மருத்துவ மாது இல்லாத குறையைப் போக்கி அப்பகுதித் தாய்மாரின் நீண்டகாலக் கஷ்டத்தை நீக்குமாறு யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகம் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளது. இது சம்பந்தமாகக் கழகச் செயலாளர் திரு. வீ. இராஜதுரை ஜே. பி., மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இப்பகுதி பட்டின சபைப் பகுதியாக இருந்த போதிலும் பின்தங்கிய வறிய மக்களே கூடுதலாக வாழுகின்றனர். இங்கு பல வருட காலமாக மருத்துவமாது நியமிக்கப்படவில்லை இதனால் இங்குள்ள பிரசவத் தாய்மார் பல மைல் தூரத்திலுள்ள மருத்துவமனைக்கு அலைய வேண்டியுள்ளது. இந்த நிலையில் இப் பகுதிக்கு மருத்துவ மாது ஒருவர் இன்றியமையாததாகும்."

B/1004

தொழிற் பயிற்சி

Technician Certificate in Quantity Surveying
Duration 3 months

- ரெலிவிசன், வீடியோ டெக், றேடியோ றிப்பியறிங் இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
- Computer Programming (BASIC--COBOL) 40 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
- DIPLOMA IN HOTEL MANAGEMENT
- FRENCH — GERMAN LANGUAGE
- மோட்டார் றிவைண்டிங்
- எலக்ரிக்கல் வயறிங்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 18.01.86

விபரங்கட்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.
141, கண்டி வீதி, (யூனியன் பேக்கரியருகாமை) சாவகச்சேரி.
விக்கினேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டி.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

உதய சிந்தனை

தியாகம் செய்வதனால் ஒருவித இன்பம் பிறக்கவில்லையானால் அந்தத்தியாகம் தியாகமே அல்ல. ....காந்திஜி.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

13-1-86 திங்கட்கிழமை (குரோதன) மார்கழி-29

சர்வதேச குழுவை நிறுத்த அனுமதியுங்கள்

தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் தமிழர் அழிப்புப் படலத்தை உலகின் கண்களிலிருந்து திரையிட்டு மறைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு இப்போது வெறும் சடலமாகியுள்ளது.

"யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு" என்ற அழகான நாமத்துடன் இக்குழு கடந்த அக்டோபர் 16-ம் திகதி அங்கு ரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

முற்றுமுழுதாக மூன்று மாதம் கூட முடிவடைவதற்கு முன்னர், குழு இந்த நிலையை அடைய நேர்ந்தது, அரசாங்கம் செய்த பாவமாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கமே தன்னிச்சையாக நீடித்ததும், அதற்கு வசதியாகக் குழுவை நியமித்ததும், தமிழர் பிரச்சினையை இழுத்தடிப்பதற்காகவே என்பதை நாம் பல தடவை இங்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி கேட்ட கண்காணிப்புக் குழு வேறு; இங்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு வேறு.

இந்தக் குழுவுக்கு இருபது பேரின் பெயர்களை அது சிபார்சு செய்திருந்தது. இதிலிருந்து இரண்டு தமிழர்கள் மட்டுமே நியமனம் பெற்றிருந்தனர்.

குழுவின் மிகுதி ஒன்பது பேரும் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர்கள்.

அந்தக் கணத்திலிருந்தே தமிழ்பேசும் மக்கள் குழுவில் நம்பிக்கை வைக்கவில்லை:

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்புச் செய்யத்தான் குழுவால் முடியாவிட்டாலும், சில உண்மைச் சம்பவங்களை சர்வதேச மட்டத்தில் தெரியப்படுத்துவதற்காகவாவது இதனைப் பயன்படுத்தலாமென்ற அற்ப நம்பிக்கையுடனேயே குழுவின் நடவடிக்கைகளை மக்கள் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும், குழுவின் தமிழ் உறுப்பினர் ஒருவர், சில சம்பவங்களை நெருக்கிக் கூறியே அறிக்கையில் சேர்த்துக்கொள்ளவேண்டியிருந்த தென்பதை முன்னர் வெளியான செய்திகள் சுட்டிக்காட்டியிருந்தன.

இம் மாதம் 4-ம் 5-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவங்கள் எத்தனை அப்பாவி மக்களை அநியாயமாகப் பலியெடுத்தது. எழுபத்தைந்துக்கும் அதிகமானோர் காயங்களுக்குள்ளாக நேர்ந்தது.

இருதரப்பினருக்குமிடையே இடம்பெற்ற தாக்குதல்களால் இவர்கள் மரணமடையவும், காயமடையவும் நேர்ந்ததென்று, உத்தியோகபூர்வ அறிக்கைகள் "உண்மையை மழுப்ய" முயற்சி எடுத்தனவாயினும் உண்மையான உண்மை என்னவென்பது அனைவருக்குமே தெரியும்.

அவசர சிகிச்சைக்காக அரசாங்க செலவில் கொழும்பு செல்லப்பட்ட சுங்கப்பகுதி உதவி கலக்டர் திரு. கணேஷ், இச்சம்பவத்தில் இறுதியாகப் பலியான அப்பாவித் தமிழன்.

இச்சம்பவங்களின் எதிரொலியாகவே, கண்காணிப்புக் குழுவின் தமிழர் பிரதிநிதிகள் இருவரும் வெளியேறியுள்ளனர்.

இதனால் கண்காணிப்புக் குழு இப்போது முடமாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இரண்டு போராளிகள் அமைப்பும் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கண்காணிப்புக் குழு சரியாக இயங்கவில்லையென்றும், குழு இனியும் தொடர்ந்து இயங்குவதில் அர்த்தமில்லையென்றும் சுட்டிக்காட்டியுள்ளன

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதனையே வலியுறுத்தியுள்ளது.

'கண்காணிப்புக் குழுவைக் கலைத்துவிட வேண்டிய அவசியத்தை, நாம் கடந்த வாரம் எடுத்துக் கூறியிருந்தோம்.

ஊனப்படுத்தப்பட்ட, முடமாகிவிட்ட இந்தக் குழு இருந்தென்ன. இல்லாமல் விட்டென்ன?

இதனால் எதனையுமே சீராகச் செய்யமுடியாதென்பதும், இது எங்கோ ஒன்றில் சிக்குப்பட்டு நிற்பதென்பதும் இப்போது தெரிந்துவிட்டது.

இந்த நிலையில், அரசாங்கம் உண்மையாகவே யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க விரும்பினால் சர்வதேசக் குழுவொன்றை, தமிழ்ப்பகுதியில் நிரந்தரமாக நிறுத்திவைக்க அனுமதிக்க வேண்டும்.

இதனைத்தான் இன்று தமிழ்மக்களும், போராளிகள் அமைப்புக்களும் விரும்புகின்றனர்.

சேலத்தில் நடைபெற்ற உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க மாநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக மேற்படி இயக்கத்தின் இலங்கைக் கிளைத் துணைத்தலைவர் திரு. ச. செந்துராசா நிகழ்த்திய உரை இங்கு தரப்படுகின்றது

தமிழர் நிலம் ஆக்கிரமிப்பு; மொழியும் கல்வியும் அழிப்பு; நூலகங்களுக்கு தீவைப்பு!

இலங்கைத் தீவில் இன்று தமிழினத்தின் நிலை அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஒரு இனத்திற்கு ஒரு நாடும் அவ் இனம் உயிர் வாழ்வதற்குரிய வாழ்க்கை வசதிகளும் இருந்தால்தான் அவ் இனம் வாழ முடியும். அப்படியான ஒரு முறை ஓர் இனம் வாழ்ந்தால் மட்டுமே அதனது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன வளர்ச்சியுற முடியும். ஆனால் இன்று ஈழத்தில் தமிழினம் சிங்கள ஆட்சியினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களது நாடு ஸ்ரீலங்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனை மீட்பதற்காக ஈழத் தமிழர்கள் இன்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது இப்போராட்டத்திற்கு உலகடங்கலும் வாழும் தமிழர்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

எமது உ. த. ப. இயக்கத்தின் நோக்கமே எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை அழியாது காத்தலாகும். இவற்றைக் காப்பதற்கு முதலில் எமது இனத்தை அழிவிலிருந்து காப்பது முக்கிய கடமையாகும். ஈழத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் தமிழினத்தை முற்றாக அழித்தொழிந்துவிடக் கூடியதாகவே தெரிகிறது. எனவே அங்குள்ள தமிழ் மக்களது போராட்டத்தில் பங்கு கொள்ளாவிடினும், எமது இயக்கத்தின் நோக்கத்திற்கமைய அங்கு அழிந்து கொண்டிருக்கும்தமிழரது கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றைப் பாதுகாக்க எனினும் இம்மாநாடு வழி செய்ய வேண்டும். இன்றைய நிலையில் இது ஒரு விழாவாக அமையாது ஆக்கபூர்வமான திட்டமொன்றை செயற்படுத்தும் மாநாடாக அமையவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

தமிழீழம், ஸ்ரீலங்கா என இரு நாடுகளைக் கொண்ட இலங்கைத் தீவை அந்நியர் கைப்பற்றி இரண்டு நாடுகளையும் தமது நிர்வாக வசதிக்காக இணைந்தனர் பின்னர் 1948ல் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிவிட்டு பிரித்தானியர் வெளியேறியபோது, ஸ்ரீலங்காவின் கையில் ஆட்சி அதிகாரம் செல்லவே அது தமிழீழத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. இவ் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதற்காக சகல வழிகளிலும் தமிழீழம் போராடிக் கொண்டிருக்கிறது.

இப்போராட்டத்தின் விளைவாக தமிழினம் இலங்கைத் தீவில் அழிந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கில் தமிழர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். கோடிக் கணக்கான தமிழர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளது ஆனால் அவற்றை எல்லாம் இந்த இயக்கம் கவனத்தில் எடுத்து இம் மாநாட்டில் ஆராயாவிடினும், கலை, கலாச்சார, பண்பாட்டு ரீதியாக ஏற்படும் அழிவுகளையாவது தடுக்க வழி செய்ய வேண்டும்

ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் அத்துமீறல் நடவடிக்கைகளால் தமிழ்ப் பகுதிகளில் கல்லூரிகள் இயங்க முடியவில்லை. பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற முடியவில்லை. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத அனுட்டானங்களை மேற்கொள்ள முடியவில்லை. தேவாலாங்கள் அழிக்கப்படுகின்றன. நூல் நிலையங்கள் எரிக்கப்படுகின்றன. இவற்றில் கலாச்சார ரீதியாக ஏற்பட்ட அழிவுகளை மட்டும் மேலோட்டமாக உங்கள் கவனத்திற்குத் தருகிறேன்:

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் முதன் முதலில் 1958-ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்கலவரத்தின் போது பல தமிழர்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர்: இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டது, கொழும்பிலிருந்து 22 கி மீ. தொலைவில் உள்ள பாணந்துறை என்ற இடத்திலுள்ள ஆலயக் குருக்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர்.

1974-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 4-வது அனைத்துலக தமிழாராச்சி மாநாடு நடாத்தப்பட்டது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிறிஞர்கள் கலந்து கொண்ட இம்மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சி 10. 1. 74ல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தீடீரென நுழைந்த சிங்கள ஆயுதப் படையினர்அப்பாவித் தமிழர் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் விளைவாக 10 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். இந் நிகழ்வு தமிழன் தனது மொழியின் பேரால் ஒரு மாநாடு நடாத்தும் உரிமை கூட ஈழத்தில் இல்லை என்பதைத் தெளிவாக உலகிற்கு எடுத்தும் காட்டியது.

1977 ல் இரண்டாவது தடவையாக ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரம் நடைபெற்றது இதிலும் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். கோடிக் கணக்கில் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டது. இக்கலவரத்தின் போதும் சிங்களப் பகுதிகளில் இருந்த பல தமிழ் பாடசாலைகள சேதமாக்கப்பட்டது.100-க்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டன. இவற்றில் குறிப்பாக கல்கமுவ கட்டுகஸ்தோட்டை என்ற இடங்களில் உள்ள விநாயகர் ஆலயங்களும், உக்குவெல, மாத்தறை, பேராதனை ஆகிய இடங்களில் உள்ள ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில்களும், வறக்காபொல என்ற இடத்திலுள்ள மாரி அம்மன் கோவிலும் அடங்கும்.

1981 ஆம் ஆண்டு மலையக மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட இனக்கலவரத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள இந்துக் கோவில் ஒன்றும் மாத்தறை, கதிர்காமம் ஆகிய இடங்கனில் உள்ள யாத்திரிகர் விடுதிகளும் சேதமாக்கப்பட்டன.

1985 பங்குனியில் இஸ்ரேலிய நாட்டு மொசாட் படையினரை இலங்கைத் தீவிலிருந்து வெளியேற்றுமாறு கோரிப் போராடிய மட்டக்களப்பு, காத்தான் குடியைச் சேர்ந்த 4 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கைத்தீவின் கிழக்கு மாகாணத்தில் மாதுறு ஓயா என்ற குடியேற்றத் திட்டத்திலும், அம்பாறை என்ற இடத்திலுள்ள புனித நகர் திட்டத்திலும் முஸ்லிம்களது காணியை அரசு சுவீகரித்து சிங்களவர்களுக்கு வழங்கியுள்ளது, இதனை முன்னாள் கல்வி அமைச்சரும் முஸ்லிம் கவுன்சிலின் தலைவருமான அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் கண்டித்துள்ளனர்,

1985 சித்திரை மாதம் கிழக்கு மகாணத்திலுள்ள இரண்டு முஸ்லிம் பள்ளிவாசல்கள் ஆயுதப்படைகளால் சேதமாக்கப்பட்டது.

இதனைவிட 1983 ல் நடைபெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான கலவரத்தில் பேலிய கொடை, மாத்தளை, கபறணை, கிண்ணியா, திருக்கோவில், சீனன்குடா, ஆகிய இடங்களில் உள்ள இந்துக் கோவில்கள் இடித்து நொருக்கப்பட்டன.

1985 ஆம் ஆண்டில் மட்டும் 52 இந்துக் கோவில்களும், 6 கிறிஸ்தவ தேவாலயங்களும், 2 முஸ்லிம் பள்ளிவாசலும் சிங்கள ஆயுதப்படைகளால் சேதமாக்கப்பட்டன,

இவை யாவும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளில் சிலவாகும்.

தமிழ் மக்களின் கல்வியை அழிப்பதிலும் ஸ்ரீலங்கா அரசு முன்னிற்கிறது. தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்பை மட்டம் தட்டுவதற்காக அரசு பல்கலைக் கழகங்களின் நுழைவில் தரப்படுத்தல் என்ற திட்டமொன்றை புகுத்தியது. இதன் மூலம் ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் உயர் கல்விக்கான வாய்ப்பை இழந்தனர் (உ.ம் - பல்கலைக்கழகத்திற்கு ஒரு சிங்கள மாணவன் 240 புள்ளிகளை பெற்று அனுமதி பெற முடியுமானால் அதேயிடத்தில் தமிழ் மாணவன் 280 புள்ளிகளைப் பெறவேண்டும். இதுதானை தரப்படுத்தலாகும்.)

1985 ல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இரு பல்கலைக்கழகங்களிலும் இராணுவம் புகுந்து தேடுதல் நடாத்தியதால் தமிழ் மாணவர்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

1977 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரங்களின் போது சிங்களப் பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற தமிழ் மாணவ, மாணவிகள் தாக்கப்பட்டனர் இக்கலவரங்களில் தமிழ்க் கல்லூரிகளும் சேதமாக்கப்பட்டன. இந்நிலையில் சிங்களப் பகுதிகளில் தமிழ் மாணவர்கள் கல்வி கற்க முடியாதுள்ளது.

சிங்களப் பகுதிகளில்தான் இவ்வாறென்றால் தமிழ்ப் பகுதிகளின் நிலையும் அப்படியே தான் உள்ளது.

பருத்தித்துறை இராணுவ முகாம் விஸ்தரிப்பின் காரணமாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி என்பன மூடப்பட்டுள்ளன.

1985 ஆனியில் மன்னாரில் உள்ள பரப்பங்கண்டல், வட்

...5ம் பக்கம் பார்க்க

ரஷ்யா எச்சரிக்கை: அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்கிலை வாளாவிரோம்

அடையாளம் தெரியாத போர்விமானம்: லிபிய ஏவுகணை சுட்டு வீழ்த்தியது!

(திரிப்பொலி)

வளைகுடாப் பகுதியில் தனது கடல் பிராந்தியத்தை அணுகிக் கொண்டிருந்த அடையாளம் தெரியாத யுத்த விமானம் ஒன்றை லிபியா ஏவுகணைகள் மூலம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதே வேளை, லிபியாவை அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்கினால் தான் சும்மா இருக்கப் போவதில்லை என்று சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய தரைக் கடலு க்கு மேலே பறந்து கொண்டிருந்த தனது எப்-8ரக ஜெட் விமானம் ஒன்றைக் காணவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட யுத்த விமானத்தை லிபியாவின் பாதுகாப்பு அமைப்புகள் ஏவுகணைகள் மூலம் சுட்டுவீழ்த்திய செய்தியை குவைத் செய்திஸ்தாபனம் வெளியிட்டது.

லிபிய விவகாரத்தில் தற்போது நிலவிவரும் நெருக்கடி நிலை வல்லரசுகள் மத்தியிலான பகைமை உணர்வை வலுப்படுத்துவதாக அமைந்து விடுமோ என்று அரசியல் அவதானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தமிழக பொலிஸ்துறைக்கு 75 இலட்ச ரூபா ஒதுக்கீடு

(சென்னை)

தமிழகத்தில் பொலிஸ்துறை மேம்பாட்டிற்காக மத்திய அரசு எழுபத்து ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இத்தொகை நடப்பு வருடத்திற்கென வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விபரத்தை மதுரையில் வைத்து வெளியிட்ட தமிழக பொலிஸ் டிரெக்டர் ஜெனரல் திரு. லக்ஷ்மிநாராயணன் குற்றச் செயல்களைக் கண்டுபிடிக்க புதிய நவீன உத்திகள் கையாளப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில்திருட்டுகள், கொள்ளைகள்என்பன இருபத்து ஐந்து சதவீதமே கண்டுபிடிக்கப்படுகின்றன என்று கூறிய அவர், ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரால் கூட நாற்பத்து இரண்டு சதவீதமே இவை கண்டுபிடிக்கப்படுவதாகவும் சொன்னார்.

பாரதம் பல அபாயங்களை எதிர்நோக்கியுள்ளது -ஆர்.வி.

(புதுடில்லி)

"நாடு பல அபாயங்களை எதிர் நோக்கியுள்ளது" என்று பாரதத் துணை ஜனாதிபதியும் ராஜ்ய சபைத் தலைவருமான திரு. ஆர் வெங்கட்ராமன் புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"குழப்பங்களையும் கலவரங்களையும் அகற்ற தேசிய மனோ உறுதி வலுப்பட வேண்டும்" என்று குறப்பிட்ட அவர், சுதந்திரத்திற்காகப் போராடியது போலவே அமைதிக்காகவும் பாடுபட வேண்டுமென வற்புறுத்தினார்.

சமூகத்தில் பதற்ற நிலை விலக உழைக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்

கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரை தேசிய ஒருமைப்பாட்டை வற்புறுத்தி சைக்கிள் சவாரி

(பெங்களூர்)

தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் நோக்கத்துடன், யாப்பா சம்பே என்ற இளைஞர் கன்யாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை சைக்கிள் சவாரி ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தம் தேசிய ஒருமைப்பாட்டுச் செய்தி பரப்பலை வெகுவாக ஆதரிப்பதாக அவர் பெங்களூரில் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்:

ஆப்கான் சமாதான முயற்சி அமெரிக்க முயற்சி ஏற்பில்லை

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் யுத்தத்தை சமாதானமாகத் தீர்க்க அமெரிக்க ஜனாதிபதி திரு. ரெனால்ட் ரீகன் எடுத்த முடிவை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி பாபிரா காமல் கண்டித்துள்ளார்.

வேற்று நாட்டுத் தலையீடுகள் ஆப்கானிஸ்தானில் இருக்கும் வரை சோவியத் துருப்புகள் வெளியேறமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

முன்நிபந்தனையின்றி ஈரான் ஈராக் பேசுதல் வேண்டுமென பாரதம் கோரிக்கை

(தெஹ்ரான்)

"வளைகுடாப் போரை ஈரானும், ஈராக்கும் முன் நிபந்தனை ஏதுமின்றி சமாதான முறையில் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும்" என்று பாரதம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தற்போது ஈரானிய விஜயம் மேற்கொண்டுள்ள பாரத வெளிநாட்டமைச்சர் திரு. பி. ஆர். பஹத் தெஹ்ரானில் அக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

வளைகுடாப் போர் குறித்துப் பிரஸ்தாபித்த பாரத வெளிவசமான வன்முறைப் பூசல் இது எனக் குறிப்பிட்டார்.

இப்போரினால் இரு நாடுகளுக்குமே தீங்கு என்றும் அவர் அபிப்பிராயம் வெளியிட்டார்.

இப் பூசலுக்குச் சமாதானத் தீர்வு அவசியம் என்ற பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கருந்தை அவர் இக்கட்டத்தில் மீண்டும் வற்புறுத்தினர்.

இது இவ்வாறு இருக்க பாரதமும் ஈரானும் மூன்று வருட காலத்துக்கான கலாச்சார உடன்படிக்கை ஒன்றில் நேற்றுக் கையெழுத்தட்டுள்ளன.

யூரேலங்கா ரவல்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
ஏ, டேய்சிவிலா அவெனியூ,
பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 585990, 589992

கிளை;
185/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(1ம் மாடி வின்ஸர் படமாளிகைக்கு எதிரே)

விமானப் பயணச் சீட்டுக்கள்

மட்ரூஸ், திருச்சி, திருவனந்தபுரம், கராச்சி, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் வெளிநாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் விமானப் பயணச் சீட்டுகளும் பாஸ்போர்ட், பொண்டிங் (Bonding) முதலிய ஒழுங்குகளும் துரிதகதியில் செய்து கொடுக்கப்படும்.

பி/1008

ரீகனுக்கு கடாபி அழைப்பு

(திரிப்பொலி)

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரெனால்ட் ரீகனை லிபியாவுக்கு விஜயம் செய்யுமாறு லிபிய ஜனாதிபதி கேர்னல் கடாபி அழைப்புவிடுத்துள்ளார்.

தமிழர்....

- 4ம் பக்கத் தொடர்

டக்கண்டல் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

13. 12 84 ல் அக்கரைப் பற்றில் க பொ. த. பரீட்சை மண்டபத்தில் இருந்த 26 மாணவிகளை இராணுவம் கைது செய்தது.

13. 11. 84 ல் யாழ்ப்பாணம் வேப்படி மகளிர் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த மாணவிகள் மீது இராணுவ வண்டியில் வந்த இராணுவத்தால் அச்சிட்டு வீசப்பட்டது.

18. 5. 85 ல் தியத்தலாவை என்ற இடத்திலுள்ள நில அளவையாளர் பயிற்சி முகாமிலிருந்த 14 தமிழ் பயிற்சியாளர்கள் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

தமிழரது கல்வியை சீரழிக்கும் நோக்குடன் நூல்நிலையங்களுக்கும் அரச படைகள் தீவைத்து அழித்துள்ளனர்.

யாழ். மாநகரத்தின் மிகப் பெரிய நூலகமான 97 ஆயிரம் புத்தகங்களைக் கொண்ட யாழ். பொது நூலகத்தை இராணுவத்தினர் 1. 6 81ல் தீயிட்டனர். இதன் மூலம் பெறுமதி மிக்க நூல்கள் எரிந்து சாம்பலானதுடன் கலை யழகு மிக்க நூலகத்தின் மூன்று மாடிக்கட்டமும் சேதமானது, இதே தினத்தில் யாழ். பாராளுமன்ற உறுப்பினரான திரு. வெ. யோகேஸ்வரனின் இல்லமும் அரது நூலகமும் எரிக்கப்பட்டதுடன், 'ஈழநாடு' அலுவலகமும், அச்சகமென்பனவும் எரித்து சாம்பராக்கப்பட்டது.

1984ஆம் ஆண்டு ஆடி மாதம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் அதன் நூலகமும், 1984 ஆவணியில் வல்வெட்டித்துறை நெடியகாடு நூலகமும், 29. 4. 85ல் அரியாலை நூலகமும், 10. 9. 85ல் திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு சம்பந்தன் அவர்களது இல்லமும் மூன்று தலைமுறைகளாகச் சேர்த்து வைக்கப்பட்ட நூல்கள் அடங்கிய அவரது நூலகமும், 1985 ல் திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் பல நூலகங்களும் இராணுவத்தால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது.

9. 5. 85 அன்று வல்வெட்டித்துறைக்கு அண்மையில் உள்ள பொலிகண்டி என்ற கிராமத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்து 46பேரைக் கைது செய்துகொண்டுசென்று அங்குள்ள நூலகம் ஒன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டுக்குண்டு வைத்து இவ் அப்பாவித் தமிழர்களைக் கொன்றதுடன் நூலகத்தையும் தரைமட்டமாக்கினர்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போதுசர்வாதிகாரி ஹிட்லர் கூட நூலகங்களுக்குசேதம் விளைவிக்கக் கூடாதென தனது படைகளுக்கு ஆணையிட்டான். ஆனால் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களோ ஹிட்லரையும் மிஞ்சி விட்டார்கள்.

வைத்தியசாலைகள் நோயாளிகள், உடல் ஊனமுற்றோர் விடுதிகள், என்பவற்றை தாக்குவதில்லை என்பது யுத்தங்களில் கூட கடைப்பிடிக்கப்படும் நடைமுறையாகும் ஆனால் ஈழத்தில்...

15. 8 85 அன்று வவுனியா வைத்தியசாலையைச் சுற்றி வளைத்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் வைத்தியர்கள், ஊழியர்கள்கடமையாற்றமுடியாது வெளியேறினர். பின்னர் இராணுவம் வைத்தியர்களது விடுதிகளுக்குத் தீ வைத்தது.

25. 1. 85 அன்று வல்லை என்ற இடத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக் கட்டிடம் இராணுவத்தால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது,

தமிழ்ப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் மருந்து, சத்திர சிகிச்சைக்குரிய அத்தியாவசிய உபகரணங்கள் என்பனதட்டுப்பாடாக உள்ளது.

தமிழர்களை சில வடிவில் கூட ஈழத்தில் இருக்க ஆயுதப் படைகள் அனுமதிக்கவில்லை.

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியன், தமிழ் மூதாட்டி ஔவை, பாட்டுக்கொரு புலவன் பாரதி, அஹிம்சா மூர்த்தி காந்திஅடிகள் போன்றவர்களின் சிலைகளையும் உரும்பிராய் என்ற இடத்தில் உள்ள தமிழ்ப்போராளி சிவகுமாரன் என்பவரின் சிலையையும், 1974 ல் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இராணுவத்தால் கொல்லப்பட்ட 10 தமிழர்களது நினைவுச் சின்னத்தையும் இராணுவத்தினர் அடித்து நொருக்கியுள்ளனர்.

எல்லா வகையிலும் அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளுக்கு உதவும் காந்தீயம் என்ற நிறுவனமும் 1983 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டது. அகதியாகச் சென்றுகூட ஓரிடத்தில் தமிழன் வாழமுடியாநிலை ஏற்பட்டுள்ளது. 10. 8. 85 திருகோணமலையில் உள்ள திரியாய் என்ற இடத்திலுள்ள அகதி முகாமில் நுழைந்து இராணுவத்தினர் பலரைச் சுட்டுக் கொன்றனர். இது போல முல்லைத்தீவு அகதி முகாமிலும் நடந்துள்ளது. இக்கொடுமைகளைப் பார்க்க விரும்பும் வெளிநாட்டாருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர் எவரும் தமிழ் ஈழப் பிரதேசத்தினுள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் சில வெளி நாட்டு நிருபர்கள் அங்கு நடைபெறும் சம்பவங்களைப் பார்த்துள்ளனர். அண்மையில் லண்னில், திருமலைப் பகுதிகளில் நடைபெற்ற அழிவுகள் பற்றிய திரைப்படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இதன் மூலம் வெளி உலகு இங்குள்ள நிலைகளைப் புரிந்துகொள்ளுகிறது. அண்மையல் தீவிரவாத இளைஞர்களுடன் ஈழத்திற்கு சென்ற திரு ப. நெடுமாறன் அவர்கள் அங்கு நடைபெற்ற கொடுமைகளைத் தமிழக மக்களுக்கு தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

14. 9. 85 அன்று இந்திய பத்திரிகையாளர் சேகர் குப்தா அவர்களும், ஆப்கானிஸ்தான் பத்திரிகையாளர் ஆலன் நாசன் அவர்களும் திருகோணமலையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் ஈழத்தில் தமிழர்களது நிலம் ஆக்கிரமிக்கப்படுகிறது. தமிழ் மொழி அழிக்கப்படுகிறது. தமிழரது கல்வி அழிக்கப்படுகிறது. தமிழரது உயர்கல்வி மறுக்கப்படுகிறது. தமிழரது நூலகங்கள் தீயிடப்படுகிறது. தமிழ்ப் பகுதி வைத்தியசாலை வசதிகள் கவனிக்கப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் அகதி முகாம்கள் கூடத் தாக்கப்படுகின்றன. இவற்றைப் பார்ப்பதற்குக் கூட வெளிநாட்டவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது இவ்வாறு துன்பத்தின் மத்தியில் ஜீவ மரணப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்

—6-ஆம் பக்கம் பார்க்க

13 . 1 . 86 திங்கட்கிழமை

முழுமுரசு

விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிப்பு

எழில்வண்ண சைபீரிய பறவைகள் தமிழ்பகுதியூடாக யாத்திரை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனையும் அதனைச் சூழவும் உள்ள மக்கள், வருடத்துக்கொரு கடவை பல்லாயிரம் மைல்கள் தாண்டி விண்ணில் பறந்து வரும் சைபீரிய நாட்டு எழில்கொஞ்சும் பறவைகளைக் கண்டு களிப்புறும் வாய்ப்பை நேற்றுக் காலை பெற்றார்கள். மஞ்சள், சிவப்பு, கறுப்பு. வெள்ளை நிறங்களைக் கொண்ட இப் பறவைகள் கூட்டம் கூட்டமாக சீதோஷ்ண நிலைகருதி இக்கலத்தில் இந்தியா, இலங்கை முதலான நாடுகளுக்குப் பறந்துவருவது வழக்கம்.

கண்காணிப்புகுழு பாரபட்சமின்றி இயங்கும்

ஆற்றலை பெற்றிருக்கவில்லை

(சென்னை)

"இலங்கையில் அமைக்கப்பட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆரம்பத்திலிருந்தே பாரபட்சமற்றுச் செயலாற்றும் திறனுற்றலைப் பெற்றிருக்கவில்லை" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்படி குழுவிலிருந்து தமிழர் இருவரும் ராஜினாமாச் செய்தது குறித்து கருத்து வெளியிட்டுள்ளது.

"மேற்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதன் நம்பிக்கைத் தன்மையை இழந்து விட்டது. இது உடன் கலைக்கப்படவேண்டும்" என்று ஈழம் புரட்சி அமைப்புப் பேச்சாளர் திரு. வி. பாலகுமார் யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்துள்ளார்.

"அழிவிலிருந்து மீள்வதற்கு மக்கள் ஆதரவையும் பாரதத்தையும் நம்பியிருப்பதாகவும் மேலும் அவரால் கூறப்பட்டது.

கிளிநொச்சி வெள்ளக்காடு அகதிகள் பெரும் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் மூன்று நாட்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக ஒரே வெள்ளக்காடாக மாறியுள்ளது. கிராமப் பகுதிகளுக்கான போக்குவரத்துகள் யாவும் தடைசெய்யப்பட்டுள்ளது. நெல்வயல்கள் யாவும் வெள்ளப் பெருக்கினால் அழிந்துவிடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. புதிதாக குடியேற்றப்பட்ட அகதிகள் குடியேற்றத் திட்டப் பகுதிகளுக்குள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் இவ்வகதிகள் வீடிழந்து மீண்டும் அகதிகளாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்றுநாட்களாகத் தொடர்ச்சியாக பெய்துவரும் பேய் மழை காரணமாக கிளிநொச்சிப் பகுதிகிராமங்களுக்குச் செல்லும் பாதைகளில் பாலங்களுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து போக்குவரத்தைச் சீர்குலைத்துள்ளது.

இரத்தினபுரம், உருத்திரபுரம், குமரபுரம், கோரக்கன்கட்டு, கனகாம்பிகைகுளம், முரசுமோட்டை, புளியம்பொக்கணை போன்ற பள்ளத்தாக்கில் அமைந்துள்ள கிராமங்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள வயல்களும் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இன்று பலத்த காற்றுடன் பெய்த மழையால் கிளிநொச்சிப் பகுதியில் வாழைத் தோட்டங்கள் பாழாகியது. பெரிய மரங்கள் கூட முறிந்துவிழுந்தன

தமிழர்....

—5-ம் பக்கத் தொடர்

களுக்கு உதவுவதற்கு இம் மாநாடு வழிசமைக்க வேண்டும்.

இக்கொடுமைகளை உங்கள் நாடுகளில் வாழும் ஏனைய இனமக்களுக்கு தெரியப்படுத்துங்கள் நீங்கள் வாழும் நாடுகளின் அரசாங்கத்தினை மனிதாபிமான அடிப்படையில் இக்கொடுமைகளுக்குள்ளதராகுரல் கொடுக்குமாறு வேண்டுங்கள்.

ஐ. நா. போன்ற உலக மன்றங்களில் ஸ்ரீலங்கா அரசின் இவ் ஆனப படுகொலையை, கலாச்சாரப படுகொலையைக் கண்டித்து அனைத்துநாடுகளும் குரல் கொடுக்குமாறு கோருங்கள்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராகஉலக நாடுகள் பல மேற்கொண்ட நடவடிக்கை போல ஸ்ரீலங்கா அரசுக்கு உலக நாடுகள் பகிஷ்கரிக்கவும், பொருளாதாரத் தடையை விதிக்கவும் தூண்டுங்கள்.

இலங்கைத் தீவில் தமிழன் தனது உயிர்வாழ்வுக்காக நடாத்தும் இப்போராட்டத்திற்கு உங்கள் முழுமையான ஆதரவை நல்குங்கள்.

பேராளருக்கு தேநீர் விருந்து

(மணக்கும்பான்)

சென்ற மாதம் சேலம் மாநகரில் நடைபெற்ற 3வது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 3வது மாநில மகாநாட்டில் பேராளர்களாகக் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகளுக்கு நேற்றையதினம் 12ம் திகதி நல்லூர் ஆதி விடுதியில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின இலங்கைக் கிளையின் தலைவர் திரு. பொன் பூலோகசிங்கத்தின் தலைமையில் தேநீர் விருந்துபசார வைபவமொன்று நடைபெற்றது. இவ் வைபவத்தில் பல அறிஞர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். விருந்துபசாரம் திரு. இ. தவகோபாலின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வடபகுதி ...

இரு பஸ்களும் திரும்பச் செல்லும்போது அரை மணி நேரம் அனுராதபுரத்தில் தரித்து நிற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையில்...

அதனையடுத்து துபாகிவேட்டுச் சத்தங்கள் முகாம் பகுதியிலிருந்து கேட்டதனால் பருத்தித்துறை நகரமே நேற்று வெறிச்சோடியது. போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடந்தது.

ஐ. தே கடசியில்....

இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியுமெனவும் அவர் சொன்னார். பொதுத்தேர்தலொன்று நடத்தப் போவதால் தனது சுதந்திரக் கடசியினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென்றும் "ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'இந்து' பத்திரிகைச் செய்தி தூணைவேந்தரின் விளக்கம்

இம் மாதம் 3-ம் திகதி 'இந்து' பத்திரிகையில் வெளியான "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சாந்தம் நிலவும் ஒரு இடம்" என்ற தலைப்பில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்ததாக வெளியான செய்தியில், சில திருத்தங்களைச் சுட்டிக் காட்டி அவர் எழுதிய கடிதம் இம் மாதம் 6-ப் திகதி 'இந்து' வின் ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் பிரசுரமாகியிருந்தது

அதனை இங்கு தருகின்றோம்:-

'பல்கலைக்கழகம் சாந்தம் தவழும் ஓர் இடமாகத் தோன்றுவதற்குக் காரணம், பொலிசாரையோ பந்தோபஸ்து படையினரையோ எதிர் கொள்ளப் "பொடியன்" நன்கு தயாராகவிருப்பதே' என நான் சொல்லவில்லை.

'யாழ் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளேயோ, அதன் அயற் சுற்றுடலிலேயோ, பல்கலைக்கழக மாணவருக்கும் பந்தோபஸ்துப் படையினருக்குமிடையில் கோபமூட்டும் நடவடிக்கை அல்லது நேரெதிர் மோதல் எதுவும் நடைபெறவில்லை; அதனால் வளாகத்தில் சாந்தி நிலவியது ஆகையால் பல்கலைக்கழகம் அதிக சீர்குலைவின்றிச் செயற்படக் கூடியதாகவிருந்தது. உள்ளபடியாக நான் இப்படித்தான் கூறினேன்.

'வடக்கிலும் பார்க்க இலங்கையின் கிழக்கில் நிலைமை படுமோசமானது; இராணுவத்தினரின் "தேடு-அழி" நடவடிக்கைகளுக்குப் பெரும் இலக்காவது மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியாகும்' என நான் தெரிவிக்கவில்லை. நான் எடுத்துச் சொன்னவை வருமாறு: இலங்கைத் தீவின் கிழக்கில் உள்ள மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அதற்கு அண்மித்தாக நேரும் சம்பவங்கள் காரணமாக, தங்குதடையின்றி அது செயலாற்ற இயலாதிருந்தது என்பதுதான்.

நோயாளர் சோற்றில் கல்

யாழ். அரசினர் வைத்திய சாலையிலுள்ள நோயாளர்களுக்கும் அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கும் வழங்கப்படும் உணவில் அதிக எண்ணிக்கைகளில் கற்கள் காணப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலைக்குத் தேவையான உணவுப் பொருட்களை விற்பனை அபிவிருத்தித் திணைக்களம் வழங்குவதாகவும். அவர்களால் வழங்கப்படும் அரிசியில் அதிகளவு கற்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அப்பாவித் தமிழர்....

களாக இருப்பதால் இக் குழு நடுநிலைமையுடன் செயற்படுமெனக் கூறமுடியாது. எனவே இக்குழு இருப்பதில் அர்த்தமில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்குமாக சர்வதேச குழுவொன்று அமைக்க வேண்டுமென்ற இவ் இயக்கத்தின் கோரிக்கை மீண்டும் இவ் அறிக்கையிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இ. தொ. கா

பதிலை அனுப்பிவைத்தது.

இதற்கு அரசாங்கம இன்று அறிவிக்கும் முடிவையடுத்து, காங்கிரஸ் தனது முடிவை அறிவிக்கும். அவ்வகையில் பிராந்தியத்தை இயக்கம் நிறுத்தப்படலாம் அல்லது நிபந்தனையுடன் பின்போடப்படலாமென்று தெரியவந்துள்ளது.

யுத்த நிறுத்த..

வில் இடம்பெற்ற இரண்டு தமிழர்களும் ராஜினாமாச் செய்ததையடுத்து, ஈழம் தேசிய விடுதலை முன்னணி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வாபஸ் பெறுவதென்ற தனது யோசனையை அறிவித்துள்ளது.

அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி முன்னணியின் சென்னைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கம், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எப், ஈரோஸ் ஆகிய நான்கு போராளிகள் அமைப்புகளும் ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

அஞ்சலிப் பிரசுரம்

கடந்த மாதம் 11ம் திகதி அரியாலையில் சுட்டுக்கொலைப்பட்ட மூவருக்கு 31வது நாள் நினைவு அஞ்சலியாக, அரியாலை மக்கள் பெயரில் துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப் பட்டுள்ளது.

புதிய உறுப்பினர்

ஈழம் தேசிய விடுதலை முன்னணியால் பிரேரிக்கப்பட்ட இருபது பெயர்களிலிருந்தே இவர்கள் இருவரும் அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இதேவேளையில் ஓஸ்திபதி ஜெயவர்த்தனா இவர்களை இருவரினதும் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டுள்ளார்.

கூட்டணி கேட்கிறது

சர்வதேசக் குழு நியமிக்குக!

(சென்னை)

"இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பை மேற்கொள்ள சுயேற்சையாகச் செயலாற்றத் திறனுற்றல் உள்ள சர்வதேச அமைப்பே முற்றிலும் அவசியமானது". என்று சென்னையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பீரோ தெரிவித்துள்ளது.

"இலங்கை அரசின் ஆதிக்கத்தில் உள்ள எந்த ஒரு கண்காணிப்புக் குழுவினாலும் பாரபட்சமின்றிச் செயலாற்ற முடியாது" என்றும் அது கருத்து வெளியிட்டுள்ளது.

மரண அறிவித்தல்

திரு. செல்லையா கணேஷ்

(யாழ். மாவட்ட மேலதிக சுங்க இறங்குதுறை அளவையாளரும் உதவி சுங்க சேகரிப்பாளரும்)

திரு. செல்லையா கணேஷ் அகால மரண மடைந்தார் இவர் தி மலரின் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி) அன்புக் கணவரும், ரவீந்திரன் (யாழ். மருத்துவ பீடம்), சாந்தி (யாழ். விஞ்ஞான பீடம்), சிவாஜினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சரவணபவன் (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், திரு மதி திருவருள் க பதிப்பிள்ளை (ஆசிரியை வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) யின் மைத்துனரும் திரு குமாரசாமி கணபதிப்பிள்ளை (சட்டத்தரணி) யின் சகலனுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு இல. 136, கச்சேரி -நல்லூர் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

பி/16126

தி. கணபதிப்பிள்ளை

"ஈழமுரசு" சாயிபாபா அட்வாடைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37. கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில 13 - 01 - 86 திங்கடகிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336